## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா கவர்ன்மென்ட் இன்பொமேசன் இன்பிரஸ்டரக்ஷர் (பிரைவட்) லிமிடெட் கம்பனியின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 351,040 மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ரூபா 52,656 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் சம்பளம் தயாரிக்கும் கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய மீதியான ரூபா 304,382 கடன்பட்டோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | திசெம்பர் மாதத்திற்காக EPF மற்றும் ETF செலுத்த வேண்டியிருந்ததுடன் SSP இற்கு மாற்றப்பட்ட தொகை திசெம்பர் இறுதியில் கிடைக்க வேண்டியதாக கருதப்பட்டுள்ளது. எனினும் நாங்கள் 2023 யூன் மாதத்தில் இருந்து அமுல்படும் வகையில் உள்ளக சம்பள பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளமை யால் இந்த பிரச்சினைகள் தொடர்ந்தும் உரித்தற்றதாகும். | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள் யாவும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தாய்க் கம்பனியின் (இன்பொமேசன் கொம்மியுனிகேசன் டெக்னொலொஜி ஏஜன்சி ஒப் ஸ்ரீ லங்கா (பிரைவட்) லிமிடெட்) இன் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கம்பனிச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் படி கம்பனி இன்பொமேசன் கொம்மியுனிகேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீ லங்கா (பிரைவட்) லிமிட்டெட் உடன் ஒன்றிணைவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களின் தாமதத்தின் காரணமாக ஒன்றிணைத்தல் செயற்பாடுகள் தாமதமடைந்துள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாய்க் கம்பனி (இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனம்) கிடைக்க வேண்டிய மீதி ரூபா 44,001,286 ஆக இருந்ததுடன் அதனை 2015 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | LGII ICTA உடன் ஒன்றிணைந்து தொடர்ச்சியான செயற்பாடுகள் ஊடாக இந்த உள்ளக கம்பனியின் மீதியை தீர்த்துவைப்பதற்கு ICTA திட்டமிடும். | பெற வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 133(1)ஆம் பிரிவு | சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு கலண்டர் ஆண்டிற்கும் ஒரு தடவை பங்கு உரிமையாளர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் கம்பனி வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்தி இருக்கவில்லை. | 2019 முதல் 2022 ஆம் ஆண்டுகளுக்காக நிதிக் கணக்குகளை தயாரித்தல் தாமதம் வருடாந்த பொதுக் கூட்டத்தைக் கூட்டுதல் தாமதம் அடைந்ததற்கு காரணமாகும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | நிறுவன நிர்வாகம் தொடர்பான வழிகாட்டி 2.2.2 | பணிப்பாளர் சபைக் கூட்டம் ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை தொடர்ந்து நடாத்த வேண்டியமையை கம்பனியின் தலைவர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் கம்பனி பணிப்பாளர் சபைக் கூட்டத்தை நடாத்தியிருருக்கவில்லை. | LGII ICTA உடன் ஒன்றிணைவதற்கு உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது ஒன்றிணையும் செயற்பாடுகள் நடைபெறுகின்றது. அது செயற்படாத நிலைமையின் பிரகாரம் மாதாந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பணிப்பாளர் சபை கூட்டம் கோருவதற்கான தேவையொன்று ஏற்படவில்லை. | |
| (ii) | நிறுவன நிர்வாகம் தொடர்பான வழிகாட்டி 2.3 | கம்பனி மீளாய்வாண்டிற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீடு தயாரித்திருக்க வில்லை. | LGII இன் ஊழியர் படையணியை உள்ளடக்கிய ஊழியர்கள் ஏழு பேர்கள் மாத்திரம் இருந்ததுடன் LGII செயற்பாடுகள் ICTA இல் டிஜிட்டல் சேவை நிலையத்திற்கு எடுத்துச் செல்லல் அது ICTA இல் முழுமையாக இணைந்த நிறுவனமாக LGII செயற்பாடுகின்றமையால் அதனுடன் சார்ந்த கிரயம் ICTA பாதீட்டில் உள்ளடக்கப் பட்டுள்ளது. இந்த ஏழு உத்தியோகத்தர்களும் 2023 யூன் 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் ICTA சம்பளப் பதிவேட்டிற்கு மாற்றப்பட்டமையால் இது கவனத்திற் கொள்ள முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | செயற்பாட்டுக் கைநூல் 3.2 ஆம் பந்தி | நிலைபேறான தன்மை மற்றும் கைத்தொழில் அங்கீகாரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்துரைத்த செயற்பாடுகளைப் பின்பற்றி ஊழியர் எண்ணிக்கை ஆட்சேர்த்தல் நடைமுறை, சம்பள படிநிலைகளை உள்ளடக்கி மனித வள முகாமைத்துவத்திற்காக தேவையான விடயங்களை தீர்மானித்தல் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதும் கம்பனி அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை காணப்படவில்லை. | LGII தற்போது எந்தவொரு செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடாதிருந்ததுடன் ICTA உடன் ஒன்றிணைந்துள்ளது. SOR (ஆட்சேர்ப்பு உத்தேச திட்டம்) இற்காக தேவை இப்போது எழவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை காணப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | செயற்பாட்டுக் கைநூல் 6.6 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையுடன் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் கம்பனி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களை 304 நாட்களுக்குப் பின்னர் சமர்ப்பித்திருந்தது. | முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் விடுவிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தலில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,133,248 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,041,493 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 91,755 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 350,742 ஆன இலங்கை வங்கியின் இலக்கம் 0072839158 என்ற வங்கிக் கணக்கில் வங்கி மீதி 2020 திசெம்பர் 31 முதல் இரண்டு வருடங்கள் அளவிலான காலம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | LGII செயற்பாட்டு நடவடிக்கைகள் காணப்படாமையின் காரணமாக இந்த மீதி மாற்றப்படவில்லை. எவ்வாறாயினும் பணிப்பாளர் சபை நியமிப்பதுடன் இந்த பணம் நடைமுறைக் கணக்கில் வைக்கப்படாமல் பயன்பாட்டிற்கு எடுப்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். | நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |